www.Padasalai.Net www.CBSEtips.in

K

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

Reg.No.

## பதினொன்றாம் வகுப்பு

## தாவரவியல்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 45

### பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 11 x 1 = 11

1. ஜிம்னோஸ்பெர்ம்களில் சல்லடை குழாய்களைக் கட்டுப்படுத்துவது எது?
   a) அருகாமையில் உள்ள சல்லடை குழாய்கள்
   b) ஃப்புளோயம் பாரங்கைமா செல்கள்
   c) துணைச் செல்களின் உட்கருக்கள் d) அல்புமீன்ஸ் செல்களின் உட்கருக்கள்
2. இருவிதையிலைத் தண்டில் வாஸ்குலக் கற்றையிலிருந்து இலை இழுவை நீட்டிக்கப்படும் பொழுது இலை நரம்பின் வாஸ்குலத் திசுக்கள் எவ்வாறு அமைந்து இருக்கும்?
   a) சைலம் மேல்புறத்திலும் ஃப்புளோயம் கீழ்புறத்திலும் இருக்கும்
   b) ஃப்புளோயம் மேல்புறத்திலும் சைலம் கீழ்புறத்திலும் இருக்கும்
   c) சைலம் ஃப்புளோயத்தை சூழ்ந்திருக்கும் d) ஃப்புளோயம் சைலத்தை சூழ்ந்திருக்கும்
3. முதிர்ந்த தண்டின் மையப்பகுதியில் இரண்டாம் நிலை சைலமானது அடர் மற்றும் கடினமாக அமைப்பைக் கொண்ட நீர் கடத்தாப் பகுதி
   a) அல்பர்னம் b) பாஸ்ட் c) கட்டை d) டியூரமென்
4. வழக்கமாக குப்பி தக்கை எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?
   a) டெர்மடோஜன் b) ஃபெல்லோஜென் c) சைலம் d) வாஸ்குலக் கேம்பியம்
5. வறண்ட நிலத் தாவரமான ஒபன்ஷியாவில் எவ்வகை நீராவிப் போக்கு சாத்தியம்?
   a) இலைத்துளை நீராவிப்போக்கு b) லெண்டிசெல் நீராவிப்போக்கு
   c) க்யூட்டிகிள் நீராவிப்போக்கு d) மேற்கூறிய அனைத்தும்
6. இலைத்துளை திறப்பு எதைச் சார்ந்தது?
   a) பொட்டாசியம் அயனியின் உள்நுழைவு b) பொட்டாசியம் அயனியின் வெளியேற்றம்
   c) குளோரைடு அயனியின் உள்நுழைவு d) ஹைட்ராக்ஸில் அயனியின் உள்நுழைவு
7. ஒரு தாவரத்திற்கு அனைத்து கனிமங்களும் வழங்கப்பட்டு Mn செறிவு மட்டும் அதிகமாக இருந்தால் ஏற்படும் குறைபாடு யாது?
   a) Fe, Mg உட்கொள்திறனை தடுக்கும் ஆனால் Ca தவிர
   b) Fe, Mg மற்றும் Ca உட்கொள் திறனை அதிகரிக்கும்
   c) Ca உட்கொள்திறனை மட்டும் அதிகரிக்கும்
   d) Fe, Mg மற்றும் Ca உட்கொள்திறனைத் தடுக்கும்
8. மீண்டும் இடம்பெயராத தனிமம் எது?
   a) பாஸ்பரஸ் b) பொட்டாசியம் c) கால்சியம் d) நைட்ரஜன்
9. கூற்று (A) : தைலக்காய்டுகளின் உள் இடைவெளியில் அதிகரிக்கும் புரோட்டான் செறிவானது ATP உற்பத்திக்கு காரணமாக உள்ளது.
   காரணங்கள் (R): PSI-இல் காணப்படும் ஆக்ஸிஜன் வெளியேற்றம் கூட்டமைப்பு தைலக்காய்டு உறையின் மீது ஸ்ட்ரோமாவை நோக்கி காணப்படுவதுடன் $H^+$ அயனிகளை வெளியேற்றுகிறது.
   a) கூற்று மற்றும் காரணங்கள் சரி b) கூற்று சரி, காரணங்கள் தவறு
   c) கூற்று தவறு, காரணங்கள் சரி d) கூற்று, காரணங்கள் இரண்டும் தவறு
10. எவ்வகை பச்சையத்தில் பைட்டால் வால் பகுதி காணப்படுவதில்லை?
    a) பச்சையம் a b) பச்சையம் b c) பச்சையம் c d) பச்சையம் d

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



11. கிரான்ஸ் உள்ளமைப்பு கீழ்க்கண்ட தாவர இலையின் பண்பாகும் ________.
a) கரும்பு b) கோதுமை c) உருளைக்கிழங்கு d) கடுகு

பகுதி - II

II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி: 5 x 2 = 10

12. ஸ்கிலிரன்கைமா மற்றும் டிரக்கீடுகள் ஏன் இறந்த செல்களாகக் காணப்படுகிறது?
13. ஒன்றிணைந்த, இருபக்க ஒருங்கமைந்த, திறந்த வாஸ்குலக் கற்றையின் படம் வரைந்து பாகம் குறி.
14. தாவரங்கள் இலைகள் உதிர்ந்த பின் எவ்வாறு சுவாசிக்கிறது?
15. நன்கு நீரூற்றினாலும், மண்ணில் உள்ள அதிகப்படியான உப்பு அடர்வினால் தாவரம் வாடுகிறது. விளக்கு.
16. அப்போபிளாஸ்ட் வழிப்பாதை, சிம்பிளாஸ்ட் வழிப்பாதை - வேறுபடுத்துக.
17. தாவரம் A சாட்டைவால் நோய், தாவரம் B சிற்றிலை நோய் அறிகுறிகள் கொண்டுள்ளது. A, B யின் கனிமக் குறைபாட்டினைக் கண்டறிக.
18. நீர் ஊடக வளர்ப்பு, காற்றூடக வளர்ப்பு - வேறுபடுத்துக.

பகுதி - III

III. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி: 3 x 3 = 9

19. சல்லடைக் குழாய்கள் என்றால் என்ன? விளக்குக.
20. இருவிதையிலை இலையின் உள்ளமைப்பை படம் வரைந்து பாகம் குறி.
21. கட்டையின் மையப்பகுதி அடர்ந்த நிறத்துடன் காணப்படும். ஏன்?
22. தரச சர்க்கரை இடைமாற்றக் கொள்கையில் பாஸ்பாரிலேஸ் நொதி எவ்வாறு இலைத்துளையினைத் திறக்கிறது?
23. நைட்ரஜன் நிலைநிறுத்தலில் நைட்ரோஜீனேஸ் நொதியின் பங்கினை விவரி.

பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 3 x 5 = 15

24. இருவிதையிலை வேருக்கும், ஒருவிதையிலை வேருக்கும் உள்ள உள்ளமைப்பியல் வேறுபாடுகளை எழுது.

*(அல்லது)*

இருவிதையிலை தண்டிற்கும், ஒருவிதையிலை தண்டிற்கும் இடையே உள்ள உள்ளமைப்பியல் வேறுபாடுகளை எழுதுக.

25. நீ புதிதாக வீடு கட்ட, மரக்கடைக்குச் சென்று மரம் வாங்கும் போது நேர்த்தியான கட்டையை எவ்வாறு தேர்ந்தெடுப்பாய்?

*(அல்லது)*

செயற்கை பதப்படுத்தும் முறையை விளக்குக.

26. நீரியல் திறனைக் கட்டுப்படுத்தும் கூறுகள் யாவை?

*(அல்லது)*

ஆஞ்சியோஸ்பெர்ம்களின் பூச்சியுண்ணும் உணவூட்ட முறையினை விவரி.

*******

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
Scanned by CamScanner